தொழில்நுட்ப அலுவலர்

TECHNICAL OFFICER

தொழில் 41	ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரை	நுட்பம் 4 முதல் 12 வரை

ஒப்பந்ததாரர்கள் பதிவு & புதுப்பித்தல் மற்றும் வரைவாளர் இல்ல வரலாறு குறித்த சிறப்பு மலர்

23.04.2022 அன்று வேலூரில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டம்

TAMILNADU DRAUGHTSMEN'S ASSOCIATION
CHEPAUK, CHENNAI – 600 005
e-mail : tnda1945@gmail.com Phone 044 -28556565

செய்யும் தொழிலே தெய்வம்–அதில்
திறமை தான் நமது செல்வம்

தொஅச

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

மத்திய செயற்குழு கூட்ட நிகழ்வுகள்

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

தலைவர் மடல்

அன்பார்ந்த வரைவாளர் நண்பர்களே ! வணக்கம் !
செய்தி மலர் மூலம் தங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நமது 25 ஆண்டு கனவு நனவாகி எங்களது பதவி காலத்தில் சுமார் 348 இளநிலை வரைதொழில் அலுவலர் பெருமுயற்சி மற்றும் கடின உழைப்பிற்கு பின் நியமனம் நடைபெற்று இன்று நமது துறையில் பணியாற்றி வருவது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது.

பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை பயிற்சி நிறுவனத்தில் புதிதாக பதவியேற்ற இளநிலை வரைதொழில் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் போது, உறுப்பினர்களின் திறமை மற்றும் செயல்பாடு நன்றாக தெரிகிறது. வரைவாளர்களின் நிலை நன்றாக இருக்கும். அனைத்து நிலையிலும் உள்ள நமது வரைவாளர்களின் மொத்த காலிப்பணியிடம் சுமார் 150 மட்டுமே நிரப்பப்படவேண்டும் என்பதையும், அனைத்து நிலையிலும் உள்ள வரைவாளர்களின் பதவி உயர்வு உடனுக்குடன் எங்களது பதவி காலத்தில் வழங்கப்பட்டு வருவதையும் இத்தருனத்தில் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது கிளைச்சங்கங்களின் செயல்பாடு நன்றாக உள்ளது, உதாரணமாக ஓய்வு பெற்று சுமார் 10 ஆண்டுகளுக்கு பிறகும் இளைஞராக பணியாற்றும் திருச்சி திரு.S.ரகுமான்கான் அவர்கள் தன்னை பாரட்ட வேண்டும், புகழ் பரவ வேண்டும் என புகழுக்காக அல்லாமல், தன்நலம் கருதாமல் மேம்போக்காக செயல்படாமல் ஆக்கபூர்வமாக செயல்படுவது இளைஞர்களுக்கு ஒரு நல்வழிகாட்டி என உறுதிபட கூறுகிறேன். அவரைப்போல் அனைத்து உறுப்பினர்களும் நிர்வாகிகளுடன் இணைந்து சங்கத்தை உயர்ந்த இடத்திற்கு கொண்டுவர பாடுபட வேண்டும். உறுப்பினர்கள் விட்டுக்கொடுத்து நமது சங்கம் வளர்ச்சி பெற பாடுபட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். நான் சங்கப்பணி மேற்கொள்ள வந்ததற்கு அவரே காரணம் என்றும் அதற்கு வழிவகுத்தது திரு.S.பவுன்ராஜன் அவர்களே ஆகும்.

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

சீரும் சிற்பபோடும் செயல்பட்டால் மட்டுமே நமது உறுப்பினர்களின் முன்னேற்றம் உறுதி செய்யப்படும் என்றும், ஆக்க பூர்வமான செயல்பாடுகளை மேற்கொள்ள முயற்சி எடுத்து செல்ல வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது பதவி காலத்தில், அனைத்து நிலை வரைதொழில் அலுவலர் பணியிடமும் பெரும்பாலும் பூர்த்தி செய்த மகிழ்வோடும், சங்கப்பணிகளில் சிறப்பாக செயல்பட்ட மனநிறைவோடும், பிப்ரவரி 2023–ல் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்துடன் தமிழ்நாடு வரைவாளர் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து விடைபெறுகிறேன் என்றும், தமிழ்நாடு வரைவாளர் சங்கத்திற்கான எனது பங்களிப்பினை தொடர்ந்து வழங்குவேன் என்றும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க வரைவாளர் சங்கம் ! வளர்க நமது ஒற்றுமை !

என்றும் சங்கப் பணியில்

R. பெருமாள் பிள்ளை
மாநில தலைவர்
தமிழ்நாடு வரைவாளர் சங்கம்

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

பொது செயலாளர் மடல்

தமிழ்நாடு வரைவாளர்கள் சங்க உறுப்பினர்கள் மற்றும் மூத்தோர்களுக்கு வணக்கம்,

நமது வரைவாளர்கள் சங்கத்தின் நீண்ட கால கனவான தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் இளநிலை வரைதொழில் அலுவலர்கள் தேர்ந்தெடுப்பது ஆகும். இது தற்போது நனவாகி உள்ளது. சுமார் 348 இளநிலை வரைவாளர்கள் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் கட்டமாக 329 இளநிலை வரைவாளர்கள் பணி அமர்வு செய்யப்பட்டுள்ளனர். பொதுப்பணித்துறையில் 144 இளநிலை வரைதொழில் அலுவலர்களும் நீர்வளத்துறையில் சுமார் 185 இளநிலை வரைதொழில் அலுவலர்கள் பணியமர்வு செய்யப்பட்டுள்ளனர். முன்னாள் மாநிலத் தலைவரும் இந்நாள் ஆலோசனைக் குழு தலைவருமான **திரு.எஸ்.பவுன்ராஜன் தலைமை வரைதொழில் அலுவலர் பணி நிறைவு அவர்களும்**, இந்நாள் மாநிலத் தலைவர் **திரு.ஆர்.பெருமாள்பிள்ளை தலைமை வரைதொழில் அலுவலர் பணி நிறைவு** அவர்களுடன் நானும் இணைந்து பாடுபட்டுள்ளேன் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான்கு உதவி வரைவாளருக்கு இளநிலை வரைதொழில் அலுவலராக பதவு உயர்வு பெறப்பட்டது. 82 இளநிலை வரைதொழில் அலுவலர்களுக்கு பதவி உயர்வில் வரைதொழில் அலுவலராக பதவி உயர்வு பெறப்பட்டது. 52 வரைதொழில் அலுவலர்களுக்கு பதவி உயர்வில் முதுநிலை வரைதொழில் அலுவலராக பதவி உயர்வு பெற்றுள்ளனர். தலைமை வரைதொழில அலுவலர் பதவி உயர்வு 22 வரைவாளர்களுக்கு அரசாணை பெறப்பட்டு 16 வரைவாளர்கள் பணியில் சேர்ந்துள்ளனர். எஞ்சிய 6 பேர்களுக்கு காலி பணி இடம் ஏற்படும்போது பெறப்படும். இதனை தொடர்ந்து சிறப்பு நிலை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கிறேன்.

முதுநிலை வரைதொழில் அலுவலர் (மின்) பதவி உயர்வு கோரி முதன்மைத் தலைமைப் பொறியளர் (ம), தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்களிடம் கடந்த 09.11.2022 அன்று கோரிக்கை விடுத்தேன். உடனடியாக தனியரின் பட்டியல் கோரப்பட்டு இருவருக்கு பதவி உயர்வு பெற்றுத் தந்துள்ளோம்.

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

எதிர்வரும் 04.02.2023 அன்று கோவையில், கோவை, நீலகிரி மற்றும் திருப்பூர் கிளையின் சார்பில் **மத்திய செயற்குழு கூட்டம்** நடத்த மத்திய சங்கம் ஒப்புதல் வழங்கி உள்ளது. அனைவரும் மேற்படி மத்திய செயற்குழு கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன். கோவை. நீலகிரி மற்றும் திருப்பூர் கிளைச் சங்கம் மேற்படி கூட்டத்தை சிறப்பாகவும் முன் மாதிரியாகவும் நடத்திக் கொடுக்க வேண்டுகிறேன்.

பொள்ளாச்சி கிளை மாக்கினாம்பட்டி பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட வளாகத்தில் வரைவாளர் மாளிகை உள்ளது. இதனை நமது முன்னோர்கள் சிறப்பாக நமக்கு வழங்கி உள்ளனர். தற்போதைய நிலையில் மேற்படி கட்டடம் பழுதடைந்து உள்ளதால் அதனை புதுப்பிக்கும் பணி மத்திய சங்கத்தின் ஒப்புதலுடனும், உறுப்பினர்களின் பங்களிப்புடனும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பொள்ளாச்சி கிளைச்சங்க உறுப்பினர்கள் நிதியுடனும் பிற கிளைச் சங்கத்தின் மூலம் புதுப்பிக்கும் பணி நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. பொள்ளாச்சி கிளைச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பிற கிளைச் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தாராளமாக நிதி உதவி வழங்கிட அன்புடன் வேண்டுகிறேன். விரைவில் புதுபிக்கப்பட்ட கட்டடம் திறப்பு விழா நடத்தப்படும் என மகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

பதவி உயர்வு பெற்றவர்கள் மத்திய சங்க வளர்ச்சி நிதி தாராளமாக வழங்க வேண்டுகிறேன். தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கம் கடும் முயற்சியின் மூலம் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் பணி நியமனம் பெற்ற இளநிலை வரைதொழில் அலுவலர்கள் மற்றும் இன்னும் ஆயுள் உறுப்பினர்களாக சேராதவர்கள் அனைவரும் விரைவில் ஆயுள் உறுப்பினர்களாக தங்களை இணைத்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

வாழ்க தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கம்
வளர்க தமிழ்நாடு வரைவாளர்களின் ஒற்றுமை.

நன்றி.

அன்புடன்
S.K. கலைச் செல்வன்,
பொதுச் செயலாளர்

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

31.05.2022 அன்று தலைமை வரைதொழில் அலுவலர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற நமது சங்கத்தின் மாநில தலைவர் திரு.R.பெருமாள் பிள்ளை அவர்களுக்கு கோவை, சேப்பாக்கம், வேலூர், மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை கிளைச்சங்கங்களில் பணிநிறைவு பாராட்டு விழா நடத்தப்பட்டது. அதன் தொகுப்பு காட்சிகள்

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

சென்னை வரைவாளர் இல்ல வரலாறு

நமது வரைவாளர் சங்கத்திற்கு முதன் முதலில் மதுரை கிளையில் தான் சொந்தமாக வரைவாளர் இல்ல கட்டடம் கட்டப்பட்டது. அதேபோல அலுவல் நிமித்தமாக சென்னை செல்லும் நமது சங்க உறுப்பினர்கள் தங்குவதற்கு நமது சங்கத்திற்கென ஒரு இல்லம் கட்டப்பட வேண்டும் என மையச்சங்க நிர்வாகிகள் மற்றும் கிளைச்சங்க நிர்வாகிகளால் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அதற்கு போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் சென்னையில் தற்காலிகமாக ஒரு வாடகை கட்டடம் பிடித்து அதில் இயங்குவது அதன் பின்னர் சொந்த கட்டடம் கட்ட முயற்சி மேற்கொள்ளலாம். என முடிவு செய்யப்பட்டது.

அதன்படி 1989–ம் வருடம் சென்னை கலைவாணர் அரங்கத்திற்கு எதிர்புறம் T.N.K.சந்தில் ஒரு வாடகை கட்டடம் ரூ.1000/– மாத வாடகையில் பிடிக்கப்பட்டு அதில் நமது சங்க உறுப்பினர்கள் சென்னைக்கு அலுவல் நிமித்தமாக செல்பவர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டு சென்னையில் நமது வரைவாளர் இல்லமானது தற்காலிகமாக இயங்கி வந்தது.

அதன் பின்னர் சென்னையில் வரைவாளர் இல்லத்திற்கு சொந்த கட்டடம் வாங்குவதற்கு அனைத்து கிளைகள் மூலமும் நிதி திரட்டி வாங்குவதென முடிவெடுக்கப்பட்டு அதற்கு பெரு முயற்சி எடுக்கப்பட்டது. முதலில் பரிசுத் திட்டம் ஆரம்பித்து அதன் மூலம் ஒரு தொகையானது திரட்டப்பட்டது. பின்னர் தமிழகத்தில் உள்ள அனைத்து கிளைகள் மூலமும் கட்டட நிதியானது வழங்கப்பட்டது. மேற்கண்ட கட்டடத்திற்கு குறிப்பாக மதுரை, பொள்ளாச்சி, திருச்சி, திருநெல்வேலி, சேலம் மற்றும் விருதுநகர் கிளை மூலம் பெரும் முயற்சி மேற்கொண்டு அதிக அளவில் நிதி வழங்கப்பட்டது. மற்ற கிளைகள் மூலமும் போதிய நிதி வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிதி திரட்டுவதற்கு மூன்று வருடங்கள் ஆகின. அதன் பின்னர் 1993–ம் வருடம் கலைவானர் அரங்கத்திற்கு எதிர்புறம் அருணாச்சல முதலியர் தெருவில் ஒரு பழைய கட்டடம் சுமார் 1100 சதுர அடி பரப்பளவில் வாங்கப்பட்டது. மேற்கண்ட கட்டிடத்தில் 600 சதுர அடியில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் 5 அறைகள் இருந்தன. மீதி 500 சதுர அடியானது நீளமான சந்து மற்றும் வெற்றிடமாக இருந்தது. அந்த கட்டிடத்தில் தான் நமது வரைவாளர் இல்லமானது 1993 முதல்

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

2013 வரை சுமார் 20 ஆண்டுகள் இயங்கி வந்தது.

மேற்கண்ட கட்டடமானது மிகவும் பழைய கட்டடமாக இருந்தாலும் அதில் நமது இல்லமானது மேலும் 20 ஆண்டுகள் இயங்கியதாலும் கட்டடம் மோசமான நிலையில் இருந்தது. அதனை சுற்றி கட்டடங்கள் இருந்ததால் அதனை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்ட இயலாத சூழ்நிலையில் இருந்தது. மேலும் புதிய கட்டடம் கட்டும் அளவிற்கு நமது சங்கத்தில் போதிய நிதி வசதியுடம் இல்லை. மேலும், 2010–ம் ஆண்டு நமது சங்கமானது மிகவும் வலுவிழந்து விட்டதால் மேற்கண்ட கட்டடத்தை பராமரித்துப் பார்க்கவும் இயலவில்லை.

வலுவழந்த நமது சங்கத்தை மீட்டெடுத்து மீண்டும் வலுவாக செயல்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு 2010–ம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் திரு.N.B.புண்ணியமூர்த்தி, பொதுச் செலாளராகவும் திரு.சுந்தரம், மாநிலத் தலைவராகவும் நான் அமைப்புச் செயலாளராகவும் பொறுப்பேற்றோம்.

நாங்கள் பொறுப்பேற்றப்பின் மேற்கண்ட நமது இல்லக் கட்டடத்தை புதுப்பித்தல் தொடர்பாக பல்வேறு ஆலோசனைகள் நடத்தினோம். அன்றைய பொதுச் செயலாளர் திரு.N.B.புண்ணியமூர்த்தி மூலம் அதற்கு சிறந்த வழி பிறந்தது. தற்போதும் கலைவாணர் அரங்கத்திற்கு எதிராக அமைந்துள்ள The Kings Park Hotel உரிமையாளர் நமது இல்லக் கட்டடத்தை விலைக்கு வாங்க முன்வந்ததையடுத்து, வரைவாளர் இல்லக் கட்டடத்தை மேற்கண்ட Hotel உரிமையாளர்களிடம் விற்றுவிட்டு அந்த தொகையில் வேறு கட்டடமோ அல்லது வேறு இடத்தில் நிலம் வாங்கி புதிய கட்டடமோ கட்டலாமா என ஆலோசனை செய்தோம். ஆனால் அதற்கான சாத்தியக்கூறுகள் எளிதில் அமையாது என்றே தோன்றியது. ஆனாலும் இந்த வாய்ப்பையும் இழக்கக்கூடாது என்றும் நல்லதொரு முடிவு எடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்தோம்.

இது தொடர்பாக மேற்கண்ட Hotel உரிமையாளரிடம் திரு.N.B.புண்ணியமூர்த்தி அவர்கள் சாதூர்யமாக பேசி சில யோசனைகள் தெரிவித்தார். அதாவது அந்த Hotel உரிமையாளரே வேறு ஒரு இடம் வாங்கி அதில் புதிய இல்லம் கட்டி கொடுக்க வேண்டும் என்றும் பழைய கட்டடத்தை அவருக்கு கொடுத்து விடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. Hotel உரிமையாளரும் சுமார் 5 இடங்கள் வரை காண்பித்தார். எதுவும் எங்களுக்கு பிடிக்கவில்லை கடைசியாக நமது இல்லம் தற்போது அமைந்துள்ள இடத்தை காண்பித்தார் அந்த இடமானது நமது பழைய இல்லத்திற்கு அருகாமையில் இருந்ததால் இந்த இடத்தை தேர்வு செய்தோம்.

மேற்கண்ட இடமானது சுமார் 615 சதுர அடி நமது பழைய கட்டிடமானது காலியிடத்துடன் சேர்த்து சுமார் 1100 சதுர அடி எனவே திரு.புண்ணியமூர்த்தி அவர்கள் மேற்கண்ட Hotel உரிமையாளரிடம் மிகவும் சாதூர்யமாக பேசி நமது சங்கத்திற்கு எந்த செலவும் ஏற்படாவண்ணம் Hotel உரிமையாளரே இந்த இடத்தை வாங்கி அதில் தரைதளத்தில் ஒரு Hall முதல் தளத்தில் 3 அறைகள் இரண்டாவது தளத்தில் 3 அறைகள், மூன்றாவது தளத்தில் ஒரு அறை மற்றும் Passage என ஒரு

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

அருமையான கட்டிடம் கட்டி அதில் அனைத்து Furniture –களும் அமைத்து TV உட்பட நமது சங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டும். என பேச்சு வார்த்தை நடத்தினார். மேற்கண்ட Hotel உரிமையாளர் இதற்கு பெரிதும் தயக்கம் காட்டினார் இருப்பினும் நாங்கள் அனைவரும் அவரிடம் பேச்சு வார்த்தை நடத்தி அவரை சம்மதிக்க வைத்தோம்.

மேற்கண்ட புதிய இல்லம் கட்டும்போது கட்டுமான பணிகளை ஆய்வு செய்வதற்கென ஒரு குழுவை அமைத்து கட்டிட பணிகளை அவ்வப்போது ஆய்வு செய்து கட்டட பணியானது சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டது. புதிய இல்லக் கட்டடமானது சிறந்த முறையில் கட்டி முடிக்கப்பட்டு அனைத்து Furniture–களும் அதாவது ஒவ்வொரு அறைக்கும் மரக்கட்டில், Chair, மெத்தை மற்றும் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இவ்வாறு அனைத்து வசதிகளும் செய்யப்பட்ட பின்னர் நமது பழைய இல்லக் கட்டடத்தை மேற்கண்ட Hotel உரிமையாளரிடம் ஒப்படைத்து விட்டு புதிய இல்லக் கட்டத்தை நமது சங்கத்திற்கு பெற்றோம்.

அவ்வாறு பெறப்பட்ட இன்றைய வரைவாளர் இல்லக் கட்டடத்தை திரு.N.B.புண்ணியமூர்த்தி அவர்கள் முன்னிலையில் நமது சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர், திரு.N.சேதுராமசாமி அவர்களால் 22.02.2013 அன்று திறந்து வைக்கப்பட்டு நமது சங்க உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட புதிய இல்லம் உருவாக முழு முதல் காரணமாக இருந்தவர் நமது முன்னாள் பொதுச் செயலாளர், திரு.N.B.புண்ணியமூர்த்தி தான் அவருக்கு இத்தருணத்தில் நமது வரைவாளர்கள் சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளோம்.

நன்றி,

அன்புடன்,
சு.பவுன்ராஜன்,
முன்னாள் மாநிலத் தலைவர்.

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

கோவை வரைவாளர் இல்ல வரலாறு

கோயம்புத்தூரில் இரயில்வே குடியிருப்பு வளாகத்தில் புதிதாக வரைவாளர் இல்லம் அமைக்க இடம் 2002-ல் ஒதுக்கீடு பெறப்பட்டது. அதனை தொடர்ந்து பல்வேறு வழிகளில் கட்டடம் கட்ட முயற்சிக்கப்பட்டது. இரண்டு முறை கால்கோன் விழாவும் நடத்தப்பட்டது. ஆனாலும் ஏனோ கட்டடம் அமைக்க இயலவில்லை.

நான் அமைப்பு செயலாளராக பணியேற்ற நாளில் நமது சங்கம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பட்டியலிடப்பட்டது. அதில் கோவையில் வரைவாளர் இல்லம் அமைப்பது என்பதும் ஒன்றாகும். அன்றைய மாநிலத் தலைவர்,திரு.எஸ்.பவுன்ராஜன், மாநில பொதுச் செயலாளர், திரு.ஆர்.பெருமாள்பிள்ளை ஆகிய இருவரின் பேராதரவு மற்றும் எங்கள் மூவரின் ஒத்துழைப்பினால் 26.01.2019 அன்று மூன்றாவது முறையாக அடிக்கல் விழா நடத்தப்பட்டது. அன்றைய நிலையில் மத்திய சங்க நிர்வாகிகள் அனைவரும் வருகை புரிந்துள்ளனர். மாநிலத் தலைவர் நமது கிளைச் சங்க நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். குறிப்பாக கோவை, நீலகிரி மற்றும் திருப்பூர் கிளையின் மூத்த உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்திருந்தோம். பெரும்பாலனவர்கள் வருகை தந்து வாழ்த்தினார்கள்.

திரு.கே.சிவப்பிரகாசம், திரு.முருகன், திரு.சிவசுப்பிரமணியம்,

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

திரு.வி.ஜி.பாலசுப்பிரமணியம், திருமதி.மல்லிகா பாலசுப்பிரமணியம், திரு.அன்பழகன், திரு.சிவசங்கரன் மற்றும் பலர் வருகை தந்து வாழ்த்தியும் தமது பங்களிப்பினையும் வழங்கி ஊக்கப்படுத்தினார்கள்.

பின்னர் மத்திய சங்க பேராதரவினாலும், பிற கிளைச் சங்கத்தின் நிதி உதவியின் மூலமும் கோவை, நீலகிரி மற்றும் திருப்பூர் கிளைச் சங்கத்தில் சிலரின் பங்களிப்புடன் பணிகள் நிறைவடைந்தது. கடந்த 20.02.2021 அன்று தமிழ்நாடு கோவை வரைவாளர் இல்ல கட்டடத்தினை மாநிலத் தலைவர். திரு.எஸ்.பவுன்ராஜன் அவர்களால் திரு.ஆர்.பெருமாள்பிள்ளை அவர்கள் தலைமையில் எனது முன்னிலையிலும் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி கட்டட திறப்பு விழாவிற்கு அன்றைய கோவை மண்டல நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர், பொறி.விஸ்வநாத், கோவை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட அலுவலக கண்காணிப்புப் பொறியாளர், பொறி.எஸ்.காசிலிங்கம் அவர்களும், ஏனைய சங்கத்தின் பொறுப்பாளர்களுடன் கோவையை சார்ந்த மூத்த வரைவாளர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பு செய்தனர்.

கட்டடம் அமையப் பெற்ற பகுதி குளத்தின் கரைக்கு அருகில் இருந்ததால் Pile Foundation மூலம் மேற்கொண்டு அனைத்து மூலைகளிலும் pile Connect செய்து பின்னர், Grade Beam அமைத்து தரைக்கு மேல் முழுவதும் இரும்பு கம்பிகள் மூலம் பரப்பு செய்து தரை RCC கான்கிரிட் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. நான்கு தனி அறைக்குள் கழிப்பறை வசதியுடன் கூடிய, ஒரு கூட்ட அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. நல்ல காற்றோட்ட வசதியுடன், வெளிச்சம் முழுவதும் நிலைக்கும் வகையிலும் எழில் மிகு தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுமானத்திற்கு மத்திய சங்க நிதி உடன், கிளைச் சங்க நிதியும் சில அன்பு உள்ளம் கொண்டோரின் பங்களிப்புடனும் எஞ்சிய தொகை என்னால் வழங்கப்பட்டு அமைக்கப்பட்டது.

மேற்படி கட்டடம் அமைய என்னுடன் ஒத்துழைத்த கிளைச் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரு. எஸ். அருண்குமார், திரு.B.ராஜேஷ். திரு.எம்.சந்திரன் மற்றும் திரு.ஆர்.சித்தார்த் அவர்களுக்கும் எனது நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன். இதற்கான நிதி வழங்கிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியினை தெரிவிக்கிறேன்.

நன்றி,

அன்புடன்,
சு.க.கலைசெல்வன்,
மாநில பொதுச்செயலாளர்.

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

பொள்ளாச்சி வரைவாளர் மாளிகை வரலாறு

பொள்ளாச்சியில் 1996–ம் ஆண்டு வரை பரம்பிக்குளம் ஆழியார் திட்டம் மற்றும் சிறப்பு திட்ட வட்டம் என இரண்டு கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் செயல்பட்டது. அதன் கீழ் சுமார் 10 கோட்ட அலுவலகம் செயல்பட்டது. அப்பொழுது வரைவாளர்கள் ஒன்று கூடி கூட்டம் நடத்துவதற்கான சரியான கட்டடம் இல்லை. வரைவாளர்களுக்கு என்று ஓர் கட்டடம் தேவை என ஒவ்வொரு கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டது. 1990 காலகட்டங்களில் சென்னை மத்திய வரைவாளர் சங்கத்திடமும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அதன்பின் கண்காணிப்புப் பொறியாளர் பொள்ளாச்சி வட்டம் அவர்களை அணுகி வரைவாளர் சங்கத்திற்கு என்று பரம்பிக்குளம் ஆழியார் திட்ட வளாகத்தில் ஓர் இடம் பெறப்பட்டது.

இடம் கிடைக்கப்பெற்ற பின் அதில் ஓர் கட்டிடம் கட்டுவதற்கான கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட வட்டங்களில் உள்ள அனைத்து வரைவாளர் நண்பர்கள். 1) தலைமை வரைதொழில் அலுவலர் 2) சிறப்பு நிலை வரைதொழில் அலுவலர் 3) முதுநிலை வரைதொழில் அலுவலர் 4) வரைதொழில் அலுவலர் 5) இளநிலை வரைதொழில் அலுவலர் 6) உதவி வரைவாளர் என அனைவரும் அழைக்கப்பட்டு கூட்டத்தில் பல்வேறு கருத்துக்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அதன்பின் இறுதியில் வரைவாளர்களின் சொந்த

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

பணத்திலேயே ஓர் கட்டடம் கட்டலாம் என முடிவு செய்தோம். அந்த தருணத்தில் அலுவலகத்தில் மூத்தோர் மற்றும் இளையோர் என்ற நிலை இருந்தது. ஆனால் அலுவலகத்திற்கு பிறகு எல்லோரும் ஓர் இனம் என்ற உணர்வோடு கூடி மேற்படி கட்டடம் அமைக்க பாடுபட்டோம்.

கட்டிடம் கட்டுவதற்கான வரைபடங்கள் தயாரித்து கீழ்கண்ட அலுவலர்கள் முக்கிய ஆலோசனை உறுப்பினர்களாக இருந்து செயல்படுத்தினோம்.

1. திரு.எம்.பால்ராஜ், தலைமை வரைதொழில் அலுவலர்
2. திரு.கே.கே.எம்.தாமோதரன், தலைமை வரைதொழில் அலுவலர்
3. திரு.எஸ்.ரத்தினம், தலைமை வரைதொழில் அலுவலர்
4. திரு.எஸ்.அப்துல்சலாம், இளநிலை வரைதொழில் அலவலர்.
5. திரு.கே.முத்துக்கிருஷ்ணன், BE., உதவி வரைவாளர்

ஏனைய அனைவரும் உறுதுணையாக நின்று உதவினார்கள்.

01.12.1991 அன்று அனைவராலும் வரைவாளர் சமுதயத்தின் பிதாமகர் என்று போற்றப்பட்டவரும் மாநிலத் தலைவருமான திரு.என்.சேதுராமசாமி அவர்கள் தலைமையில் மரியாதைக்குரிய பொறியாளர் திரு.ஆர்.என்.கிருஷ்ணன், தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித் துறை அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றே கட்டிட பணிகளை ஆரம்பித்தோம். கே.முத்துக்கிருஷ்ணன் ஆகிய நான் மற்றும் திரு.அப்துல்சலாம், இளநிலை வரைதொழில் அலுவலர் ஆகிய இருவரும் முழுமையாக கட்டிட பணிகள் மேற்கொண்டோம். அவ்வப்போது கட்டிட வேலை செய்தவர்களுக்கு சம்பளம் மற்றும் கட்டுமானப் பொருட்கள் வாங்குவதற்கும் பணம் பற்றாக் குறையாக இருந்து வந்தது.

இது போன்ற காலங்களில் எங்களது பணத்தில் வேலையாட்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. பணிகள் தொய்வில்லாமல் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அன்றைய காலத்தில் உறுப்பினர்களின் சம்பளத் தொகை மிகவும் குறைவானது. குடும்பம் நடத்துவதற்கே பற்றாக்குறை இருந்தது. ஆனாலும் பொள்ளாச்சி கிளைச் சங்க நண்பர்கள் முழு மனதுடன் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையை விட அதிகமாக கொடுத்தார்கள். அதன் பயனாக குறுகிய காலத்தில் ஓர் மிகப்பெரிய கட்டிடமாக வடிவமைக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது. அதன் பின் கட்டிட திறப்பு விழா மற்றும் மத்திய செயற்குழு கூட்டம் புதிதாக பொள்ளாச்சியில் உருவான "வரைவாளர் மாளிகையில்" வைத்துக் கொள்ளலாம் என பொள்ளாச்சி கிளையின் சார்பில் முடிவு செய்யப்பட்டு மத்திய சங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டது. அதன் படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிளைச் சங்கங்களுக்கும் விழாவில் கலந்துகொள்ள பத்திரிக்கை அனுப்பப்பட்டது. அனைத்து கிளைச் சங்கங்களை சேர்ந்தவர்களும் வருகை தந்தனர். அவர்களுக்கு தேவையான தங்குமிடம் ஆய்வு மாளிகை போன்றவற்றில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி கட்டடத்தை 15.11.1992 அன்று வரைவாளர்கள் சமுதாயத்தின் ஜாம்பவான் என கருதப்பட்ட திரு.என்.சேதுராமசாமி தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் அவர்களது தலைமையில் பொறியாளர்.திரு.இரா.என்.கிருஷ்ணன், தலைமைப் பொறியாளர், (பொது), பொதுப்பணித்துறை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த விழாவில் மரியாதைக்குரிய திரு.மா.பால்ராஜ், திரு.எஸ்.ரத்தினம், திரு.கே.கே.எம்.தாமோதரன் போன்ற மூத்தோர்கள் மேற்படி விழாவினை முன் நின்று நடத்தி சிறப்பித்தனர். முதல் நாள் இரவு, மறுநாள் காலை

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

மற்றும் மதியம் என மூன்று வேளையும் சிறந்த உணவுகள் பரிமாறப்பட்டது. இதைத் தொடர்ந்து கூட்டம் இனிதே நிறைவேறியது. வரைவாளர்கள் அனைவரும் உறுதுணையாக இருந்து அனைத்து பணிகளுக்கும் ஒத்துழைப்பு செய்தமைக்காக அனைவருக்கும் பொன்னாடை அணிவிக்கப்பட்டது. அதன் பின் ஒவ்வொரு மாதமும் மேற்படி கட்டிடத்தில் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்று வந்தது.

ஏற்கனவே நமது வரைவாளர் மாளிகையில் கீழ் தளத்தில் ஒரு தனி அறையும், கூட்ட அரங்கு 40 அடி x 21 அடி என்ற அளவில் அமைக்கப்பட்டு மேல் தளத்திற்கு உள்ளிருந்து மேலே செல்லும் வகையில் படிகள் அமைக்கப்பட்டது. கூடுதலாக ஒரு அறை அமைக்க வேண்டும் என அனைவராலும் கருத்து தெரிவித்ததன் அடிப்படையில் முதல் தளத்தில் ஒரு அறை 21x10 என்ற அளவில் கழிப்றையுடன் கூடிய அறை அமைக்க திட்டமிடப்பட்டது. பொள்ளாச்சி பரம்பிக்குளம் ஆழியாறு வடிநில வட்ட அலுவலகத்தில் அன்று பணியாற்றிய திரு.சாய்பாபா, சிறப்புநிலை வரைதொழில் அலுவலர், திரு.சேவியர், வரைதொழில் அலுவலர், திரு.மயில்சாமி மற்றும் திரு.கந்தச்சமி, இளநிலை வரைதொழில் அலுவலர்கள் ஆகியோரின் முக்கிய பங்களிப்புடனும் ஏனைய வரைதொழில் அலுவலர்களின் பங்களிப்புடனும் என்னுடைய மேற்பார்வையிலும் அறை அமைக்கப்பட்டது. நமது பொள்ளாச்சி கிளைச் சங்க வரைவாளர் மாளிகை கட்ட எங்களுடன் துணை நின்ற திரு.அப்துல்சலாம், இளநிலை வரைதொழில் அலுவலர் அவர்களை சிறப்பிக்கும் நோக்கில் மேற்கண்ட அறை அவரது பெயரில் அமைக்கப்பட்டது. இது, அன்றைய மாநிலத் தலைவர் திரு.கே.சண்முகம் அவர்களால் 19.06.1999 அன்று திறந்து வைக்கப்பட்டு இன்று வரை பயன்பாட்டில் உள்ளது. இங்கு கிளைச் சங்க கூட்டம் நடத்தப்பட்டு வந்தது. இனி வரும் காலங்களிலும் இது போன்று அனைவரும் ஒற்றுமையாக இருந்து சங்கத்தை வளர்த்து அனைவரும் நலம் பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

நாள்: 05.01.2023
இடம்: பொள்ளாச்சி

அன்புடன்,
கே.முத்துக்கிருஷ்ணன்
உதவிப் பொறியாளர் (பணி நிறைவு)

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

விருதுநகர் வரைவாளர் இல்ல வரலாறு

2001–ம் ஆண்டு விருதுநகர் பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு பொறியியல் சங்கம் மற்றும் பொறியாளர்கள் சங்கம் சார்பில் அவர்கள் சங்கத்திற்கு அரசிடமிருந்து இடம் ஒதுக்கீடு பெற்று அவர்களது சங்க கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வந்தது. அப்போது நான் **(எஸ்.பவுன்ராஜன், முன்னாள் மாநிலத் தலைவர்)** விருதுநகர் கிளையின் செயலாளராக இருந்தேன். அந்த சமயம் நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் **திரு.எஸ்.வள்ளிநாயகம்** என்னிடம் வந்து நாமும் நமது கிளைச் சங்கத்திற்கு பொதுப்பணித்துறை அலுவலக வாளாகத்தில் இட ஒதுக்கீடு பெற வேண்டும் என தெரிவித்தார்.

அவரது வேண்டுதல் படி அப்போதைய வைப்பாறு வடிநில வட்ட கண்காணிப்புப் பொறியாளர், **திரு.சபாபதி** அவர்களிடம் சங்கத்தின் சார்பாக வேண்டுகோள் விடுத்து நமது கிளைச் சங்கத்திற்கு ஒரு இட ஒதுக்கீடு பெற்றோம். இட ஒதுக்கீடு பெற்ற சில மாதங்கள் கழித்து நமது கிளைச் சங்கம் இட ஒதுக்கீடு பெற்ற இடத்தின் முன்பக்கம் துறை அலுவலர்களுக்கு Cycle Stand கட்டுவதற்கு அப்போதைய இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்ட செயற்பொறியாளர் திரு. K.சக்திவேல் அவர்களால் அளவீடு செய்யப்பட்டு கொண்டிருந்தது.

அந்த சமயம் நான் இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்டக் கோட்டத்தில் இளநிலை வரைதொழில் அலுவலராக பணியாற்றிக் கொண்டிருந்தேன். மேற்கண்ட திட்ட செயற்பொறியாளரிடம் நான் நல்ல மதிப்பை பெற்றிருந்தேன். அதனால் அவரிடம் சென்று தாங்கள் அளவீடு செய்து கொண்டிருக்கும் இடத்திற்கு பின்புறம் நமது சங்கத்திற்கு இட ஒதுக்கீடு பெற்றுள்ள விவரத்தினை தெரிவித்தேன். செயற்பொறியாளர் என் மீது வைத்திருந்த மதிப்பின் காரணமாக Cycle Stand இடத்தை சற்று தள்ளி அளவீடு செய்ததுடன் சங்க கட்டட பணிகளை எப்போது ஆரம்பிக்க உள்ளீர்கள் எனக் கேட்டார்.

அதற்கு நான் தற்சமயம் கிளையில் போதுமான நிதியில்லை என்றும் எனவே, கட்டடம் கட்ட சிறிது காலம் ஆகும் என்றும் தெரிவித்தேன். அதற்கு செயற்பொறியாளர் மேற்கண்ட இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்டப் பணிகளுக்கு

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

என்னுடைய சிறப்பான பங்களிப்பை நினைவு கூர்ந்ததுடன் கட்டட பணிகளை உடனடியாக துவங்குமாறு அதற்கு அவர் உதவி புரியதாகவும் தெரிவித்தார்.

உடனடியாக நான் கிளைச் சங்க கூட்டத்தை ஏற்பாடு செய்து, மேற்கண்ட விவரத்தை தெரிவித்தேன். மேலும் இது ஒரு நல்ல வாய்ப்பு இதனை பயன்படுத்தி சங்க கட்டடத்தை உடனடியாக கட்ட அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என தெரிவித்தேன். எனது வேண்டுகோளை ஏற்று அனைத்து உறுப்பினர்களும் தாராளமாக நிதி உதவி அளித்தார்கள்.

இருக்கன்குடி நீர்த்தேக்கத்திட்ட செயற்பொறியாளரின் பெருமுயற்சி, மற்றும் நமது சங்க உறுப்பினர்களின் முயற்சியுடனும், மையச் சங்கத்திடமிருந்து எந்த நிதியுதவியும் பெறாமல் விருதுநகர் கிளைக்கு அதுவும் தமிழகத்தில் உள்ள கிளைகளில் மிகவும் சிறிய கிளையான விருதுநகர் கிளைக்கு ஒரு சங்கக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது எனப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கண்ட கட்டடத்தை மற்ற கிளை நிதியுதவியுடன் நமது மையச் சங்க தணிக்கையாளர், **திரு.கே.உசிலாமணி** அவர்களால் புனரமைக்கப்பட்டு கிளைச் சங்கம் மற்றும் மையச் சங்க நிர்வாகிகள் வேண்டுகோளுக்கு இணங்க நான் பணியிலிருந்து ஓய்வு பெற்றப் பின்னரும் மீண்டும் 08.10.2022 அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, உறுப்பினர்கள் முயற்சி எடுத்தால் அனைத்து கிளைகளிலும் சங்கக் கட்டடம் கட்ட முடியும். சுமார் 15 உறுப்பினர்களை மட்டுமே கொண்டு செயல்படும் விருதுநகர் கிளையின் சாதனையை மனதில் வைத்து அனைத்து கிளைகளிலும் சங்கக்கட்டடம் கட்ட அந்தந்த கிளை உறுப்பினர்கள் முயற்சி எடுக்க வேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்.

அன்புடன்,
சு.பவுன்ராஜன்,
முன்னாள் மாநிலத் தலைவர்.

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

திருச்சி வரைவாளர் இல்ல வரலாறு

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கம்

திருச்சி மாவட்டக் கிளை

தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கத்தின் மாவட்டக் கிளைகளில் திருச்சி மாவட்டக்கிளை பாரம்பரிய மிக்க கிளைகளில் ஒன்றாக செயல்பட்டு வந்தது. 1980 ஆம் ஆண்டை ஒரு அளவு கோலாகக் கொண்டு கிளைகளின் செயல்பாடுகளைக் கணக்கிட்டால் சுமார் 120 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பலம் பொருந்திய கிளையாக இயங்கி வந்தது. அக்காலக் கட்டத்தில் மாநிலத் தலைவராக திரு.M.D.சுப்ரமணியம் அவர்களும் மாநிலப் பொதுச் செயலாளராக திரு.V.சுவாமிநாதன் அவர்களும் இணைந்து செயல்பட்டு வந்தனர்.

1983ஆம் ஆண்டு திருச்சி கிளைச் சங்கத்திற்கு ஒரு சொந்த கட்டடம் தேவை என்பதைக் கருதி முன்னாள் செயலாளர் திரு.K.துரைராஜன் அவர்கள் சங்கக் கூட்டங்களில் அதனை வலியுறுத்தி கூறி வந்தார். அவரது கோரிக்கையின் அவசியம் கருதி திருச்சி மன்னார்புரம் C.L.C Campus ல் பொ.ப.துறையின் இடம் இருப்பதாகவும், அதற்குரிய வழியில் திருச்சி பொ.ப.துறை கோட்ட செயற்பொறியாளர் அவர்களை அணுகி கோரிக்கை மனுவினை வரைவாளர்கள் சங்கம் திருச்சி கிளையின் சார்பில் கொடுங்கள் என இன்றைய த.நா.வ.சங்கம், மத்திய சங்கத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.எஸ்.ரஹ்மான்கான் அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். நண்பர் திரு.S.ரஹ்மான்கான் அவர்கள் அப்போது திருச்சி கோட்டத்தில் இ.நி.வ.தொ.அலுவலரகப் பணிபுரிந்த நேரம் அது. அன்றைய கால கட்டத்தில் திரு.அருளானந்தசாமி, திரு.A.P.மருதை, K.துரைராஜன், திரு.ராஜமாணிக்கம், திரு.ஞானப்பண்டிதன், திரு.K.மணவாளன், திரு.T.S.ராஜேந்திரன், திரு.G.கமலபதி, திரு.எஸ்.விஸ்வநாதன், திரு.S.செல்லப்பா போன்ற சங்க முன்னோடிகள் சங்கப் பணிகளில் தீவிரமாக செயல்பட்டு வந்த காலம் அது.

நண்பர் திரு.S.ரஹ்மான்கான் அவர்களது வழிகாட்டுதல்படி உரிய முறையில் விண்ணப்பித்து, சங்கத்திற்கான இடம் 15.00மீ x 10.00 மீட்டர் அளவில் திருச்சி வரைவாளர் சங்கத்திற்கு பெறப்பட்டது. இடம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்த திரு.S.ரஹ்மான்கான் அவர்களுக்கு த.நா.வ.சங்கம் நன்றி கடன்பட்டுள்ளது. பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் சங்க கட்டடம் கட்டும் முயற்சி இறுதியாக்கப்பட்டு, மரியாதைக்குரிய திரு.L.R.G.அவர்களின் நல் ஆசியுடன் 31.03.1988 அன்று மாநிலத் தலைவர் திரு.K.K.M.தாமோதரன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இதனை அடுத்து கட்டடம் கட்டுவதற்கான நிதி ஆதாரங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டமிடல்கள் முடிவு செய்யப்பட்டு, அதற்கான கட்டடக் குழு ஒன்று அமைக்கப்பட்டு ஒரு நல்ல நாளில் பணிகள் துவங்கப்பட்டன். திரு.K.துரைராஜன் கட்டடக் குழு செயலாளராகவும்,

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

திரு.A.பழனிச்சாமி பொருளாளராகவும் இருந்து செயல்பட்டு கீழ்தள கட்டட வேலைகள் சுமார் பத்து ஆண்டுகளில் முடிக்கப்பட்டது.

இவ்வாறாக கட்டடப் பணிகள் நிறைவு பெற்று 06.12.1998 அன்று மாநிலத் தலைவர் திரு.K.சண்முகம் அவர்களால் திருச்சி கிளையின் வரைவாளர்கள் சங்கக் கட்டடம் கீழ்த்தளம் திறந்து வைக்கப்பட்டது.

அடுத்த கூட்டமாக திருச்சி கிளைச் சங்க நடவடிக்கைகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிறப்பான நிகழ்வுகள் இன்றி ஆண்டுகள் சில கடந்த பின்னர் திரு.ஏ.வெங்கட சுப்ரமணி அவர்கள் திருச்சி க & ப கோட்டத்தில் முதுநிலை வரை தொழில் அலுவலராகப் பணி மேற்கொண்டார். அவரது சங்கப் பணிகள் மதுரையில் கடந்த காலங்களில் சிறப்பான ஒன்றாக இருந்ததை அனைவரும் அறிந்த ஒன்றாகும். அந்த வகையில் திரு.V.வெங்கட சுப்ரமணி அவர்கள் திருச்சி வரைவாளர்கள் சங்க செயலாளராகப் பொறுப்பேற்றார். திரு.S.ரஹ்மான்கான் அவர்கள் கிழக்கு மண்டலச் செயலாளராக இருந்ததும், இவ்விருவரும் சேர்ந்து சங்கப் பணிகளை இணைந்து செயலாற்ற ஆரம்பித்ததும், சங்கப்பணிகள் வேகம் எடுத்தன. இக்காலகட்டத்தில், சங்கத்திற்கு முதல் தளம் கட்ட ஆரம்ப கட்ட பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வந்தன.

கிழக்கு மண்டலச் செயலாளராக திரு.S.ரஹ்மான்கான் அவர்கள் பொறுப்பேற்பதற்கு முன்பாக திரு.A.பழனிச்சாமி அவர்கள் கிழக்கு மண்டலச் செயலாளராகப் பொறுப்பேற்று நன்கு செயலாற்றி வந்தார்கள். கிளைச் செயலாளர் திரு.V.வெங்கடசுப்ரமணி அவர்கள் சங்க கட்டடம் முதல் தளம் கட்டும் பணிகளில் தன்னை முழுவதும் ஈடுபடுத்தி கட்டுமானப் பணிகள் நடந்து வந்தன. இக்கால கட்டத்தில் திரு.T.தனபால், கிளைச் சங்க பொருளாளராக பணிமேற்கொண்டு கிளைச்சங்க நிதிவளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். அத்துடன் கட்டுமானப் பணிகளின் போது திரு.VVS அவர்களுடன் இணைந்து செயல்பட்டதுடன், சங்க கட்டடத்திற்கு தண்ணீர் வசதியளிக்க ஆழ்குழாய் கிணறு அமைக்க பெரு முயற்சிகள் மேற்கொண்டு அப்பணிகளை சிறப்பாக செய்து முடித்தார்கள்.

முதல் தள கட்டடம் கட்டி முடிக்க பெரும் முயற்சிகள் மேற்கொண்ட இவர்களோடு, கோட்ட, வட்ட, த.பொ.அலுவலகங்களின் இநிவதொஅ, வதொஅ, முநிவதொஅ, தவதொஅ ஆகியோருடன் திரு.K.துரைராஜன், திரு.S.இராசாராம், திரு.திருஞானசம்பந்தம், கிளைத் தலைவர் திருமதி.A.செல்லம்மாள், திருமதி.V.ராதா, திரு.T.P.கணபதி, திரு.A.பால்சாமி, திரு.R.பன்னீர்செல்வம், திரு.S.கனகராஜ், திரு.சங்கரநாராயணன், திரு.R.ஜெயபால் மற்றும் அனைவரது உதவியுடனும் இதனில் மிக முக்கியமாக முதல்தள கட்டுமானத்திற்கு கிளையின் இணைச் செயலாளராகப் பணியாற்றி திரு.V.செல்வகணபதி அவர்கள் மின் சாதனப் பொருட்கள் அனைத்தும் அவரது முயற்சியில் வழங்கி பணிகள் செய்து முடிக்கப்பட்டன. இறுதியாக வரைவாளர் சங்கம் திருச்சி கிளையின் முதல்தள

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

கட்டடம் கட்டவித்திட்டு முடித்த திரு.VVS அவர்களின் பெயரை வைக்க முடிவெடுத்து VVS Hall என பெயரிடப்பட்டு முதல்தள கட்டடம் VVS Hall, திருச்சி நிவஆ மண்டல த.பொ.திரு.M.மூர்த்தி அவர்களால் 14.08.2010 அன்று திறந்து வைக்கப்பட்டது. திருச்சி கிளைக்கு முதல் தளம் கட்டிய நிகழ்வு மிகவும் சிறப்பானதாகும். காரணம் தரை தளம் கட்டி முடிக்க பத்து ஆண்டுகள் ஆன நிலையில், முதல்தளம் மிகக் குறுகிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டதேயாகும்.

திருச்சி கிளைச்சங்கப் பணிகளில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக முக்கிய நிழ்வாக மேலே குறிப்பிட்ட சங்க செயல்பாடுகள், சங்கத்திற்கு இடம் பெற்றது. சங்கத்திற்கான கிளைச்சங்க கட்டடம் தரைதளம் கட்டியது, பின்னர் முதல் தளம் VVS Hall அமைத்தது போன்ற நிகழ்வுகள் நடந்தேறின. இதுவரை சங்கப் பணிகளில் தீவிரமாக செயல்பட்டு வந்ததைப் போல, இப்போது சங்க முன்னோடிகளால் திருச்சி கிளைச் சங்கத்திற்கு நமது இடத்தில் ஒரு கூட்ட அரங்கு அமைக்க வேண்டும் என்ற திட்டம் உருவானது. கூட்ட அரங்கு கட்டுவதற்கான முயற்சிகளில் முழு ஈடுபாட்டுடன் சங்க முன்னோடிகளான திரு.S.ரஹ்மான்கான், திரு.VVS, திரு.K.துரைராஜன், திரு.T.தனபால் ஆகியோர் ஒருங்கிணைந்து திட்டமிடல் நடைபெற்றது. அதற்கான ஆயத்தப் பணிகள் தொடங்கப்பட்டன. பொள்ளாச்சியில் கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற நமது சங்க Tech-officers Guide மறு பதிப்பு வெளியிட்டு விழா நிகழ்ச்சியில் எந்தெந்த மாவட்ட கிளையில் கிளைச்சங்கம் கட்டப்படுகிறதோ அக்கிளைக்கு 30 சதவீத நிதி உதவியினை மத்திய சங்கம் வழங்கும் என்ற தீர்மானத்தையடுத்து, கூட்ட அரங்குப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. இதில் முக்கிய பங்கு தற்போதைய மத்திய சங்க ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.S.ரஹ்மான்கான் அவர்களுடையதாகும். கூட்ட அரங்கிற்கு தேவையான Tables Chairs Almirah மற்றும் தேவையான அனைத்து பொருட்களும் அவரால் வழங்கப்பட்டதாகும். கூட்ட அரங்குத் திட்டம் நண்பரின் கனவுத்திட்டம் என்றும் கூறலாம். திட்டமிட்டபடி கூட்ட அரங்கு கட்டுமானங்கள் நல்லமுறையில் முடிக்கப்பட்டு, இன்று கூட்ட நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைவராலும் பாராட்டும் விதமாக கூட்ட அரங்கு திகழ்கிறது.

நமது சங்கத்தின் நீண்ட நெடிய வரலாற்றில் மத்திய சங்க நிர்வாகிகளாக கடந்த காலங்களில் செயலாற்றிய திரு.M.D.சுப்ரமணியன், திரு.வி.சுவாமிநாதன், திரு.KKM.தாமோதன், திரு.N.சேதுராமசாமி, திரு.L.R.கோபாலகிருஷ்ணன், திரு.K.சண்முகம், திரு.வடிவேல், பொள்ளாச்சி திரு.பால்ராஜ், திரு.ரத்தினம், விருதுநகர் திரு.மாணிக்கம், நெல்லை திரு.அன்வர்கான், மதுரை திரு.அருணாச்சலம், திரு.நாகராஜன், திரு.ஜெயச்சந்திரன், புதுகை திரு.சுபாஷ் சந்திரபோஸ், தஞ்சை திரு.சுப்புவீரமணி, திரு.வி.தெய்வசிகாமணி, திருச்சி K.துரைராஜன், சேலம் திரு.சக்திவேல், திரு.ஆசைத்தம்பி, திரு.K.M.ஜனார்த்தனன், திரு.உதயகுமார், சென்னை திரு.பூபாலன், திரு.வரதராஜன், கடலூர்

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

திரு.அசோகன், சேலம் திரு.கந்தன் ஆகியோரின் சங்கப் பணிகளை நினைவு கூற வேண்டிய தருணம் இது.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் கடந்த 5 ஆண்டுகளில் சங்கத்தின் பல கோரிக்கைகளை வென்றெடுத்த முக்கிய இநிவதொ அலுவலர்களுக்கான ஊதிய மாற்றம் மற்றும் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் இநிவதொ அலுவலர்கள் தேர்தெடுக்கும் முறை இவற்றை வென்றெடுத்த மாநிலத்தலைவர் திரு.S.பவுன்ராஜன், மாநில பொதுச்செயலாளர், திரு.R.பெருமாள்பிள்ளை மாநில அமைப்புச் செயலாளராகப் பணியாற்றிய திரு.S.K.கலைச்செல்வன் மற்றும் மாநிலப் பொருளாளராகப் பணியாற்றும் திரு.G.சிவராமன் ஆகியோரது பணிகளையும் பாராட்ட வேண்டியது நமது கடமையாகும். மேலும் மேற்குறிப்பிடும் மத்திய சங்க நிர்வாகிகள், தற்பொழுது மத்திய சங்கத்தின் நிர்வாகிகளாக வெவ்வேறு பதவிகளில் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருபவர்களோடு மத்திய சங்க ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.S.ரஹ்மான்கான் அவர்களது பணியும், சங்க வளர்ச்சியே தங்களது முதல் பணி என செயல்படும் அவர்களை இத்தருணத்தில் திருச்சி கிளையின் சார்பில் வாழ்த்துகிறோம்.

தற்பொழுது திருச்சி கிளைச் சங்கத்திற்கு புதிதாக 2022-23 ஆம் ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளான திரு.V.செல்வகணபதி தலைவர் திரு.S.செந்தில்குமார், செயலாளர் திரு.J.அந்தோணி செல்வராஜ் பொருளாளர், திரு.M.விஜயகாந்த், துணைத்தலைவர், திரு.S.பாவேந்தன் இணைச் செயலாளர் திருமதி.V.குமாரி ஜெயலெட்சுமி, தணிக்கையாளர் திரு.G.ஜீவானந்தம் ம.செ.கு.உறுப்பினர் ஆகியோர் திறம்பட செயல்படுபவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களது சங்கப் பணிகள் சிறக்க வாழ்த்துவோம்.

வாழ்க தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கம்

நன்றி

இவண்

திருச்சி கிளை

தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கம்

திருச்சி.

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

தமிழ்நாடு வரைவாளர் சங்க மதுரைக்கிளை கட்டடம் வளர்ந்த நிகழ்வு

கேள்விப்பட்ட விபரங்கள் (1982-க்கு முன்)

சுமார் 1970ம் ஆண்டில் வரைவாளர் சங்க முதல் மாநில மாநாடு மதுரையில் நடத்தப்பட்டு உள்ளது. அக்காலத்தில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை வரைவாளர்கள் இணைந்து ஒரே சங்கமாக இயங்கி வந்துள்ளது. அப்போது, மாநில தலைவராக நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த திரு.மு.து.சுப்ரமணியம் (MDS)அவர்கள் இருந்துள்ளார்கள்.

அச்சமயத்தில் மதுரைக் கிளையின் செயலாளராக திரு.இல.துரைராஜ் அவர்கள் மற்றும் பலரின் முயற்சியினால் அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் தலைமையில் சிறப்பாக முதல் மாநில மாநாடு மதுரையில் Chamber of Commerce அரங்கத்தில் நடைபெற்றுள்ளது. அக்கால கட்டடத்தில் தான் மதுரைக்கிளை சங்க கட்டடம் கட்ட இடம் பெறப்பட்டுள்ளதாக தெரிகின்றது. அதன்பின் 1980-1981ஆம் வருடத்தில், மதுரை கிளையின் மாவட்ட தலைவராக இருந்த திரு.பா. காமாட்சி சுந்தரம், அவர்களாலும், மற்றும் உறுப்பினர்களின் கூட்டு முயற்சியால் ஏற்கனவே பெறப்பட்ட காலியிடத்தில் கட்டடம் A.C. சீட் கூரையுடன் கட்டப்பட்டு அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் 24.05.1981 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

1982-க்குபின் நடந்த விபரங்கள்:

மதுரை கிளை சங்க கட்டடம் A.C. கூரை மாற்றி சிமெண்ட் (R.C.C.) கூரை அமைக்க வேண்டுமெனவும், கழிவறை அமைக்க வேண்டுமெனவும், மற்றும் அருகில் உள்ள காலி இடத்தில் சங்கத்தின் வெளியூர் உறுப்பினர்கள் தங்கி பணிமேற்கொள்ள ஏதுவாக மூன்று அறைகள் புதியதாக கட்ட வேண்டுமெனவும், முடிவு எடுக்கப்பட்டு, திருவாளர்கள். எஸ்.ஆர்.ஜெயராமன், மா.ஆறுமுகம், இல.துரைராஜ், என்.ஜெயச்சந்திரன், பெ.வெங்கடாசலம் மற்றும் உறுப்பினர்களால் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கண்ட கட்டடபணிகள் மேற்கொள்வதற்கு பல்வேறு நபர்களிடம் நன்கொடையாக வசூல் செய்தும், திரை அரங்குகளில் முதல் சினிமா காட்சியின் அனைத்து இருக்கைகளையும் நமது சங்கம் பணம் கொடுத்து பெற்று அதனை கூடுதல் விலைக்கு அனுமதி சீட்டு அச்சடித்து சங்க உறுப்பினர்கள் மூலமாக பல்வேறு நபர்களிடம் விற்கப்பட்டது. அதில் கிடைத்த லாபம் கட்டட பணிக்காக பயன்படுத்தப்பட்டது.

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

மேலும், "தங்க நாணய பரிசுத்திட்டம்" போன்று பல்வேறு முறைகளில் நிதி வசூல் செய்து கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

கட்டடம் கட்டப்படும் காலத்தில் சங்க மாநில தலைவராக திரு. எல்.ஆர்.ஜி. என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு. எல்.ஆர்.கோபாலகிருஷ்ணன் அவர்கள் நமது சங்கத்தினை வெகுவாக முன்னேற்றியமைக்கு நன்றி கூறும் முகமாக அவரது பெயரில் "எல்.ஆர்.ஜி அரங்கம்" என்று கூட்ட அரங்கிற்கு பெயர் சூட்டப்பட்டு அன்றைய மாநிலத்தலைவர் திரு. கே.கே.எம். தாமோதரன், அவரது தலைமையில் திரு. எல்.ஆர்.ஜி. அவர்களால் 10.09.1988 அன்று திறக்கப்பட்டு, திறப்பு விழா மூன்று தினங்கள் வெகுவிமர்சையாக சிறப்பாக நடைபெற்றது.

அதன் பின்னர், புதியதாக கட்டப்பட்ட மூன்று அறைகள் மேல் முதல் மாடி கட்டடம், அப்போது கட்டட காப்பாளராக பொறுப்பில் இருந்த திரு. கே.கே. கோபாலகிருஷ்ணன் நாயர் அவர்கள் முயற்சியாலும், மூத்த உறுப்பினர்களான திருவாளர்கள் என்.மோகனசுந்தரம், A.மந்தைச்சாமி V.கிருஷ்ணசாமி, P.பத்மநாபன் மற்றும் எஸ்.சந்திரசேகர் ஆகியோரின் பிரதான ஒத்துழைப்பினாலும், நமது சங்கத்தின் பெருமுயற்சியாலும், திரு.என்.சேதுராமசாமி, திரு.டி.கே.சண்முகம், திரு.எம்.வடிவேலு, ஆகிய மூத்த தலைவர்களின் கடின உழைப்பினாலும், வரைவாளர்களிலிருந்து பொறியாளர்களாக பதவிமாற்றம் பெற்று சென்றவர்களின் மூலம் கட்டுமான பொருட்கள் பெற்றும் முதல் மாடி கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 2003ம் வருடம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு நன்முறையில் அனைவராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

"சங்கத்தை வளர்த்தால் தான் நாமும் வளர்வோம்."

"எனவே நம்பிக்கையுடன் சங்கத்தை வளருங்கள் நாமும் உயர்வோம்"

நன்றி

வணக்கம்

04.01.2023

சு.பிச்சைமுருகன்,
முன்னாள் இளநிலை வரைதொழில் அலுவலர்,
சங்க ஆயுள் உறுப்பினர் எண்: 512
செயற்பொறியாளர் (ஓய்வு), பொ.ப.து.

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

அன்பார்ந்த அனைத்து நிலை வரைதொழில் அலுவலர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள்

எனது பணிக்காலங்கள் சேலம், திருச்சி மற்றும் சேலத்தில் பணி செய்து ஓய்வு பெற்றேன். சேலம், திருச்சியில் நிலநீர் ஆய்வுக் கோட்டங்களில் 18 ½ ஆண்டு காலம் பணி புரிந்து பின்னர் பணி மாறுதலில் சேலம் மேல்காவிரி வடிநில வட்ட அலுவலகத்திற்கு மாறுதலில் அக்டோபர் 1998ல் பணியில் சேர்ந்து 31.05.2014 வரை இளநிலை வரைதொழில் அலுவலர், வரைதொழில் அலுவலர் மற்றும் முதுநிலை வரைதொழில் அலுவலராக பதவி உயர்வில் பணிபுரிந்த ஓய்வு பெற்றேன். எனது பணிகாலத்தில் சங்கத்திற்கு ஆற்றிய பணிகள் விவரங்கள் தொகுத்து காட்டுகிறேன்.

நான் மேல் காவிரி வடிநில வட்ட அலுவலத்தில் பணி புரிந்து வருவதை அறிந்த சேலம் (க ௧ ப)கோட்டத்து முதுநிலை வரைதொழில் அலுவலராக (HD) அவர்கள் நேரில் வந்து அவரது அலுவலக்திற்கு அழைத்து சென்றார். அய்யா யாரிடமிருந்து சொல்லி அனுப்பியிருந்தால் நானே உங்களை வந்து பார்த்திருப்பேன் என்றேன். அதனால் என்ன பரவாயில்லை என்று கூறிவிட்டு என்னை அழைத்து சென்று நீவிர் திருச்சியில் பணிபுரிந்த காலத்தில் வரைவாளர் இல்லம் அமைக்க சங்க நிர்வாகிகளுடன் சேர்ந்து பாடுபட்டாய். ஆனால் சேலத்தில் வரைவாளர் இல்லம் அமைக்க உமக்கு எண்ணம் தோன்றவில்லையா என திட்ட மற்றும் வடிவமைப்பு வட்ட அலுவலகத்தில் HD ஆக பணிபுரிந்த திரு. எம். கந்தசாமி அவர்களுடம் திரு.சாமியப்பன் HD அவர்களிடம் என்னிடத்தில் கேட்டனர். அய்யா நீங்கள் இருவரும் கட்டளையிடுங்கள் செய்ய காத்திருக்கிறேன் என்று அவர்களிடத்தில் கூறினேன். இதற்கிடையில் 2000 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஈரோட்டில் நமது சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் நடந்தது. அந்த கூட்டத்திற்கு சேலத்திலிருந்து சுமார் 12 பேர்கள் சென்று கலந்து கொண்டனர்.

அதே திங்களில் சேலத்தில் ஒப்பந்த மேலாண்மை கருத்தரங்கு நடத்த தீர்மானித்து திரு.சாமியப்பன் HD அவர்கள் தலைமையில் நடந்தன. அந்த கருத்தரங்கிற்கு மாநில தலைவர் தெய்வத்திரு. திரு. ந.சேதுராமசாமி திரு. சண்முகம், திரு. மீ.அ. வடிவேலு, கருணாமூர்த்தி, திரு. எஸ். ராகுநாத சேஷாத்திரி, தஞ்சாவூர் சாமிநாதன் HD ஆகியோர்களை அழைத்து மிக சிறப்பாக நடத்தப்பட்டன. காலை 8.50 மணிக்கு ஆரம்பித்து மாலை 6.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கருத்தரங்கிற்கு பொள்ளாச்சி, நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களிலிருந்து சுமார் 200 உறுப்பினர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள். அப்போதுதான் மீ.அ.வடிவேலு அவர்கள் திரு. கி. ரவிச்சந்திரன் வரைதொழில் அலுவலர் அவர்களிடம் திரு. கா. கந்தன் அவர்கள் சிறப்பாக

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

செயல்படுகிறார் இவரை வைத்து சேலத்தில் வரைவாளர்கள் இல்லம் கட்ட ஏற்பாடு செய்யலாமே என்று கூறினார். அதன்பின்னர் சேலம் கிளைச் சங்கத் தேர்தல் நடைபெற்றது. திரு. சாமியப்பன் அவர்கள் தலைவராகவும், திரு. கா. கந்தன் செயலாளராகவும் திரு.கி.ரவிச்சந்திரன் மத்திய செயற்குழு ஊறப்பினராகவும், திரு.சு. இளங்கோவன் பொருளராகவும் தேர்வு செய்யப்பட்டு கிளைச் சங்கம் செயல்பாட்டுக்கு வந்தது. அப்போதுதான் கிளைச் சங்கத்திற்கு வரைவாளர்கள் இல்லம் கட்ட தீர்மானிக்கப்பட்டது. திரு. சாமியப்பன், திரு. எம்.எஸ்.சிட்டிபாபு, திரு. திலிப்குமார், திரு.ரவிச்சந்திரன், திரு சி.வி.சொக்கையா மற்றும் நான் உட்பட சேலம் கட்டட (க ௧ ப) வட்ட கண்காணிப்புப் பொறியாளர் திரு.பாண்டியன் அவர்களையும், சேலம் கட்டட (க ௧ ப) கோட்ட செயற்பொறியாளர் திரு.சோமசுந்தரம் அவர்களையும், சேலம் கட்டட (க ௧ ப) உபகோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.சத்தியேந்திரன் அவர்களையும் கூட்டாக நேரில் சந்தித்து எங்கள் சங்கத்திற்கு வரைவாளர் இல்ல கட்டடம் கட்ட உரிய அனுமதி கோரினோம். அதற்கு கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் உங்கள் கோரிக்கை நியாயமானதுதான் என்று கூறிவிட்டு எங்கு இடம் கேட்கிறீர்கள் என்று கேட்டார். பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகத்தில் உதவிச் செயற்பொறியாளர் மின் உபகோட்டத்திற்கும் பொறியியல் இல்ல கட்டடத்திற்குமிடையில் உள்ள இடம் காலியாக உள்ள அந்த இடத்தினை எங்களது சங்கத்திற்கு வழங்குங்கள் என்று கோரினோம். உடன் கண்காணிப்புப் பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் உரிய மூன்று அலுவலர்களும் இடத்தினை பார்வையிட்டு இந்த இடம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும் எனஎண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் தெரிவித்து இரண்டொரு நாட்களில் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை அவர்கள் சேலத்திற்கு ஆய்வுக்கு வர உள்ளார் அவர்களிடத்தில் உங்கள் கோரிக்கைகளை நானே முன் நின்று அவர்களிடத்தில் தெரிவிக்கிறேன். நீங்கள் நான்கு, ஐந்து பேர்கள் வாருங்கள் என்று தகவல் தெரிவித்துள்ளார். அதன்படி தலைமைப் பொறியாளர் (கட்டடம்), திரு.சகாதேவன் அவர்கள் வந்தவிட்டதாகவும் நீங்கள் சுமார் 8 மணிக்கு ஆய்வு மாளிகைக்கு வரவேண்டும் என கண்காணிப்புப் பொறியாளர் தகவல் தெரிவித்தார். அதன்படி திரு. சக்திவேல், ரவிச்சந்திரன், சி.வி.சொக்கையா, இளங்கோவன், சிட்டிபாபு மற்றும் நான் உட்பட ஐந்து பேர் சென்று தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அவர்களை நேரில் சந்தித்தோம். தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அவர்கள் திரு.பாண்டியன் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களிடம் என்ன கோரிக்கை என்று கேட்டார். அதற்கு கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் வரைவாளர்கள் சங்கத்திற்கு ஒரு கட்டடம் வேண்டும் என தெரிவித்து நமது பயணியர் மாளிகை வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் கேட்கிறார்கள் என்று தெரிவித்தார். உடன் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அவர்கள் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களிடம் அவர்கள் கட்டடம்

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

கட்டுவதற்கு தேவையான இடம் உள்ளதா எனக் கேட்டார். இடம் உள்ளது என கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் தெரிவித்தார். அதற்கு தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அவர்கள் எங்களிடம் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களே இடம் உள்ளது என தெரிவித்தார். எனவே நீங்கள் யாருக்கும் தெரிவிக்காமல் காதும் காதும் வைத்தது போல் உடனே கட்டடத்தை கட்டி முடியுங்கள் என்று தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அவர்கள் அனுமதி அளித்தார். இனிமேல் காலம் கடத்தாமல் விரைவில் வரைவாளர் கட்டடம் கட்டப்படவேண்டும் என கிளைச் சங்க உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டி முடிவு எடுக்கப்படவேண்டும் என தீர்மானித்து கிளைச் சங்க உறுப்பினர்கள் இளநிலை வரைதொழில் அலுவலர்கள் ரூ.1000/-, வரைதொழில் அலுவலர்கள் ரூ.2000/-, முதுநிலை வரைதொழில் அலுவலர்கள் ரூ.3000/-, தலைமை வரைதொழில் அலுவலர் ரூ.5000/- என நிர்ணயித்து கட்டடம் கட்ட பூமி பூஜை கார்த்திகை மாதம் 8 ஆம் தேதி திரு.கே.கே.எம்.தாமோதரன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்தினோம். அதன்பின் கட்டடக் குழு அமைக்கப்பட்டு திரு.ந.சக்திவேல் அவர்கள் தலைவராகவும், திரு.ரவிச்சந்திரன் அவர்கள் செயலாளராகவும், திரு.சு.இளங்கோவன் பொருளாளராகவும் ஏகமானதாக நியமித்து செயல்பட்டனர். கட்டடம் கட்டுவதற்கு ஆகும் செலவினங்களை கணக்கீட்டு ரூ.3.40 இலட்சத்திற்கு கட்ட ஆகும் என திரு. டி.சண்முகவேல் அவர்களை கட்ட ஒப்பந்தம் செய்யப்பட்டது.

கட்டடம் சுமார் நான்கு மாத காலத்திற்குள் கட்டி முடித்து எங்களிடம் ஒப்படைத்தார். அவர்களுக்கு கட்டுமான செலவுத் தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதன் பின் கட்டட திறப்பு விழா மிகச் சிறப்பான முறையில் நடைபெற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு 2002ஆம் ஆண்டு 24.03.2002ல் திறப்பு விழாவுக்கான அழைப்பிதல் மையச் சங்கத்தின் மூலம் தயார் செய்து அனைத்து கிளைச் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. சங்கக் கட்டட திறப்பு விழாவானது திரு.பாண்டியன் கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் தலைமையிலும், திரு.சோமசுந்தரம் செயற்பொறியாளர், திரு.சத்தியேந்திரன் உதவி செயற்பொறியாளர் அவர்கள் முன்னிலையிலும் சிறப்பான முறையில் நடைபெற்றது. சங்க கட்டட திறப்பு விழாவிற்கு உள்ளூர் சங்கங்களின் அனைத்து நிர்வாகிகளையும் அழைத்து பேச வைத்து கவுரவப்படுத்தினோம். நான் 1998 அக்டோபர் திங்கள் முதல் 31.05.2014ம் ஆண்டு வரை கிளைச் சங்க செயலாளராக முழு அளவில் பணிபுரிந்து வந்துள்ளேன். அதன்படி 20.11.1998 முதல் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் மாநிலத் தலைவராக திரு. சுந்தரராமன் அவர்களும், மாநில பொதுச் செயலாளர் N.P.புண்ணியமூர்த்தி அவர்களும் மற்ற நிர்வாகிகளும் ஏகமானதாக தேர்வு செய்யப்பட்டனர்.

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

அதன்பின் 23.04.2022ல் வேலூரில் நடைபெற்ற மையச் சங்க பொதுக் குழு கூட்டத்தில் சுமார் திரு.கி.ரவிச்சந்திரன் தலைமையில் 15 பேர் கலந்து கொணடோம். அதன்பின் தொடர்ந்து இரண்டு முறை மதுரையில் நடந்த மையச்சங்க பொதுக் குழு கூட்டத்தில் சென்னையிலிருந்து மாறுதலாகி கட்டட வட்ட அலுவலகத்தில் தலைமை வரைதொழில் அலுவலராக பணிபுரிந்த கிளைச் சங்கத் தலைவராக தேர்வு செய்யப்பட்டனர். திரு.தி.பன்னீர்செல்வன் தலைமை வரைதொழில் அலுவலர் அவர்கள் தலைமையில் சுமார் 20 பேர் கலந்து கொண்டோம். அதன்பின் கோவையில் வரைவாளர் இல்லம் கட்ட பூமி பூஜை நடைபெற்றது. அதில் திரு.தி. பன்னீர்செல்வன், திரு.கா.கந்தன் அவர்களும் கலந்து கொண்டு சுமார் ரூ.40000/- வழங்கப்பட்டது. பின்பு கட்டட திறப்பு விழாவிற்கு திரு.தி. பன்னீர்செல்வன், திரு.கா.கந்தன் அவர்களும் கலந்து கொண்டு நான் (கா.கந்தன்) ரூ.2000/, திரு.தி. பன்னீர்செல்வன்-ரூ.5000/- அவர்கள் நன்கொடை வழங்கினோம். தொடர்ந்து மையச் சங்கத்தின் மூலம் நடைபெறும் கூட்டங்களில் திரு.தி. பன்னீர்செல்வன் அவர்களும், நானும் தவறாது கலந்து கொண்டு வந்துள்ளோம். அதன்பின் மையச் சங்க நிர்வாகிகளால் செயறகையரிய செயல்களின் மூலம் 1982க்குப் பிறகு இளநிலை வரைதொழில் அலுவலர் பணிக்கு உரிய திருத்த ஆணையை அரசிடம் பெற்று முதல் தவணையாக 375 பேர் இளநிலை வரைதொழில் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இது மிகப்பெரிய சாதனையாகும். வரைவாளர் கையேடு நாளது திங்கள் வரை விவரங்களை சேகரித்து முழு அளவில் புத்தக வடிவில் தயார் செய்து பொள்ளாச்சியில் நடைபெற்ற மையச் சங்க குழு கூட்டத்தில் வெளியீட்டு விழா நடைபெற்றது. திரு.எஸ்.கே. கலைச்செல்வன் மாநில பொதுச் செயலாளர் அவர்களின் தலைமையில் கோவையில் சிறப்பான வரைவாளர்கள் இல்லம் அனைவரும் பாராட்டும் விதத்தில் கட்டி முடித்துள்ளார். தற்போது மையச் சங்க நிர்வாகிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு அனைத்து நிலை வரைவாளர்களுக்கும் பதவி உயர்வு பெற்றுத் தந்துள்ளனர். இச்செயல்களை நிறைவேற்றியதற்கு மையச் சங்க நிர்வாகிகளை மனமார பாராட்டி வாழ்த்தி தெரிவித்துக் கொள்வதோடு மேலும் சங்கப் பணியில் ஈடுபடுவேன் எனத் உறுதிகூறுகிறேன்.

மிகவும் நன்றி,

இப்படிக்கு,

(கா. கந்தன்)
பொதுப்பணித்துறை
முதுநிலை வரைதொழில் அலுவலர் ஓய்வு மற்றும்
முன்னாள் கிளைச் சங்க செயலாளர், சேலம்

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

TAMILNADU DRAUGHTSMEN'S ASSOCIATION

Salem Branch, Salem - 636 007.

INAUGURAL FUNCTION OF SALEM VARAIVALAR ILLAM

Invitation

"Varaivalar Illam"

Constructed inside the Inspection Bungalow Campus, Hasthampatty, Salem is proposed to be inaugurated at 10.30 a.m. on 24.3.2002 (Sunday)

By

Er. R. PANDIYAN, B.E., F.I.E., F.I.V.,

Superintending Engineer, PWD,

Building (C& M) Circle, Salem-7.

&

Thiru. K. SHANMUGAM, L.C.E.,

State President, TNDA, Chennai,

Will Preside over the Function Senior Engineers, present and former office-bearers of the Central Body & Salem Branch of TNDA and Office Bearers of Sister Associations will participate and Offer Felicitations.

We request you to kindly participate and grace the function.

Building Committee,
And
President, Secretary and Office Bearers
of Salem Branch, TNDA

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

Annual Subscription Charges received from Branch Associations		
21.04.2021	Annual Subscription for 2021 from Madurai Branch	16,100.00
20.12.2021	Annual Subscription Charges for 2021 from Thanjavur branch	7,000.00
24.01.2022	Annual Subscription for 2022- Coimbatore branch fully paid	12,600.00
02.02.2022	Annual Subscription for 2022 - Vellore Branch fully Paid	13,500.00
12.02.2022	Annual Subscription for 2022 - Cheapuk Branch fully paid vide CC Bank, Chepayk Branch, Cheque No. 437814 Dated: 12.02.2022	27,000.00
12.02.2022	Annual Subscription for 2022 - Madurai Branch fully paid	22,500.00
12.02.22	Annual Subscription for 2022 - Villupuram Branch fully paid	7,650.00
12.02.22	Annual Subscription for 2022 - Salem Branch fully paid - Deposited directly into bank account	11,250.00
12.02.2022	Annual Subscription for 2022- Virudhunagar Branch fully paid	5,400.00
12.02.2022	Annual Subscription for 2022- Erode Branch fully paid	4,050.00
23.04.2022	Annual Subscription for the year 2022 - Kancheepuram & Thiruvallur Branch	7,000.00
23.04.2022	Annual Subscription for the year 2022 - Tirunelveli, Thenkasi & Thoothukudi Branch	22,500.00
23.04.2022	Annual Subscription for the year 2022 - Pollachi Branch	9,600.00
23.04.2022	Annual Subscription for the year 2022 - Trichy Branch	24,750.00
23.04.2022	Annual Subscription for the year 2021 - Thanjavur Branch	5,000.00
23.04.2022	Annual Subscription for the year 2022 - Thanjavur Branch - (Rs.4250/- pending for the year 2022)	20,500.00
17.09.2022	Annual Subscription for the year 2022 - Sivagangai Branch	9,000.00
09.01.2023	Balance Annual Subscription charges for 2022 from Thanjavur branch	4,500.00
		2,29,900.00

This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

Donations received from Branch Associations		
06.09.2021	Donation from Madurai, Dindigul & Theni Branch Association	5,000.00
25.09.2021	Donation from Coimbatore branch (Rs.5000) and Thiru D.Mohan & others from Electrical wing (Rs.2000) for welfare of association during COB meeting held on 25.09.2021 at Coimbatore.	7,000.00
25.10.2021	Donation from Salem Branch deposited by the Mr.Chandru, Vice President.	5,000.00
20.12.2021	Donation by Thanjavur branch	3,000.00
12.02.2022	Donation for the Renovation of Association building -by Chepauk Branch vide CCC Bank, Chepauk Branch Cheque No.437813 Dated: 12.02.2022	10,000.00
12.02.22	Donations for the welfare of Association - Villupuram branch	6,800.00
23.04.2022	Donations from Kancheepuram & Thiruvallur Branch	5,000.00
23.04.2022	Donations from Vellore & Tiruvannamalai Branch	25,000.00
23.04.2022	Donations from Virudhunagar Branch	5,000.00
23.04.2022	Donations from Villupuram Branch	2,000.00
23.04.2022	Donations from Electrical wing of Madurai Branch	5,000.00
